DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 46/2025 |
| Deposition of witness | : | PW–4 |
| Name | : | வெங்கடேஷ் |
| Father's /Husband Name | : | சீதாராமன் |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 48 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day August, 2025.
A1 Produced from Judicial custody. A2 present.

**முதல் விசாரணை:–**

நான் முடிகொண்டானில் வசித்து வருகிறேன். முடிகொண்டானில் காசி விஸ்வநாதர் கோவில் மற்றும் பிரசன்ன வெங்கடாஜலபதி கோவில் அமைந்துள்ளது. அ.சா. 1 மற்றும் 3 ஐ எனக்கு தெரியும். கடந்த 07.02.2025 ம் தேதி காலை சுமார் 8 மணியளவில் நன்னிலம் காவல் நிலையத்திற்கு நானும் தீபக் என்பவரும் சென்றிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி செல்வகார்த்தி என்பவைரை போலிசார் விசாரணை செய்தார்கள். அப்போது செல்வகார்த்தி முடிகொண்டான் காசி விஸ்வநாதர் கோவில் மற்றும் பிரசன்ன வெங்கடாஜலபதி கோவிலில் திருடியதாக போலிசாரிடம் கூறினார். அந்த தகவலை போலிசார் பதிவு செய்து என்னிடமும் தீபக் என்பவரிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். மேலும் எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்த 2 கிராம் எடையுள்ள திருமாங்கள்யம் ஒன்றை போலிசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அதில் நானும் தீபக்கும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ– 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

என்னிடம் காட்டப்படும் எனது அழைப்பாணையில் உள்ள கையொப்பத்திற்கும், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு காணப்படுகிறதா என்றால் இல்லை. என் எதிரில் எதிரியை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற பிறகு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 2 கிராம் தாலியை எங்கு திருடியதாக கூறினார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது

போல் எதிரியை என் முன்னால் விசாரிக்கவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து கையொப்பம் பெறவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.23 13:13:48 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 46/2025 |
| Deposition of witness | : | PW-5 |
| Name | : | முத்துகணேஷ் |
| Father's /Husband Name | : | நாராயணசுவாமி |
| Village | : | மேலத்தெரு முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 49 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day August, 2025.
A1 Produced from Judicial custody. A2 present.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு பார்வை மகசர்களிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான். என்னுடைய கையொப்பங்கள் மற்றும் மட்டும் **அ.சா.ஆ-4 மற்றும் 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பங்களை நான் கடந்த 08.12.2024 ம் தேதி மாலை 05.00 மணியளவில் வெங்கடாஜலபதி பெருமாள் கோவிலும், மற்றொரு கையொப்பத்தை அதே நாள் மாலை 05.05 மணியளவில் காசி விஸ்வநாதர் கோவிலிலும் திருட்டு போனது சம்மந்தமாக நன்னிலம் போலிசார் விசாரித்து வரைபடங்கள் வரைந்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பங்கள் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எத்தனை தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு தாளில் கையொப்பம் செய்தேன். நான் வரைபடம் வரைந்த தாளில் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்றால் நகை திருட்டு போனது தொடர்பாக எழுதப்பட்டிருந்தது. என்னுடன் கையொப்பம் செய்த நபர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில்கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.23 13:13:55 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 46/2025 |
| Deposition of witness | : | PW-6 |
| Name | : | தீபக் |
| Father's /Husband Name | : | தியாகராஜன் |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 29 |
| Occupation | : | கோவில் பூசாரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day August, 2025.
A1 Produced from Judicial custody.  A2 present.

**முதல் விசாரணை:-**

நான் முடிகொண்டானில் வசித்து வருகிறேன். முடிகொண்டானில் காசி விஸ்வநாதர் கோவில் மற்றும் பிரசன்ன வெங்கடாஜலபதி கோவில் அமைந்துள்ளது. அ.சா. 1 முதல் 3 ஐ எனக்கு தெரியும். கடந்த 07.02.2025 ம் தேதி காலை சுமார் 8 மணியளவில் நன்னிலம் காவல் நிலையத்திற்கு நானும் வெங்கடேஷ் என்பவரும் சென்றோம். அப்போது ஆஜர் எதிரி செல்வகார்த்தி என்பவைரை போலிசார் விசாரணை செய்தார்கள். அப்போது செல்வகார்த்தி முடிகொண்டான் காசி விஸ்வநாதர் கோவில் மற்றும் பிரசன்ன வெங்கடாஜலபதி கோவிலில் திருடியதாக போலிசாரிடம் கூறினார். அந்த தகவலை போலிசார் பதிவு செய்து என்னிடமும் வெங்கடேஷ் என்பவரிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். மேலும் எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்த 2 கிராம் எடையுள்ள தாலியை போலிசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அதில் நானும் வெங்கடேஷ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எதற்காக காவல் நிலையம் சென்றேன் என்றால் திருடிய நபரை போலிசார் பிடித்து வைத்திருப்பதாக தெரியவந்ததால் சென்றேன். நான் ஏற்கனவே எழுதப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இரண்டு கையொப்பங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரியை என் முன்னால் விசாரிக்கவில்லை

என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து கையொப்பம் பெறவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.23 13:14:01 +0530